உ
சிவமயம்



யாழ் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், ஜெர்மனி Dortmund, லண்டன் Barkingside யை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திரு இராமலிங்கம் கனகலிங்கம்

அவர்களின்

# "கனக தீபம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத்தின் குலவிளக்காய், பாசத்தின் இருப்பிடமாய்,


அன்பே வடிவமாக எம்மைப் பேணிப் பாதுகாத்து,

அனைவருக்கும் ஒளிவிளக்காய் வாழ்ந்த எம் தெய்வத்தின்

நினைவாக ஒளிரும் "கனக தீபம்" என்ற இம் மலரை

உங்கள் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்



*In Loving Memory of late* ***Mr Ramalingam Kanagalingam***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அன்னை மடியில்

31 * 10 * 1957



ஆண்டவன் அடியில்

12 * 09 * 2016

# அமரர் திரு இராமலிங்கம் கனகலிங்கம்

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி அமைந்த ஆவணித் திங்கள்
பூண்ட பூர்வபக்க ஏகாதசித் திதியதனில் - மாண்பு
இராமலிங்கம் மைந்தன் கனகலிங்கம் ஐயன்
பரமனடி சேர்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தோத்திரமாலைத் தொகுப்பு

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

## தேவாரம்

மாதர் பிறை கண்ணியானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந்தேத்தி. புகுவார் அவர் பின்புகு வேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய்ச் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பக கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனை
திருவழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண் குளிர்தனவே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை பொற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடிபோற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பாமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புண மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மனமருள் பெருமாளே

## கந்தரலங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசாிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

## பட்டினத்தார் பாடல்

கல்லாப்பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாய் பிழையுநின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருட்பா

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய் பிடியா திருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்க வேண்டும்
உனை மறவா திருக்க வேண்டும்
மதி வேண்டும் நின்கருணை நிதிவேண்டும் - நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தண்முகத் துய்ய மணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்து
உண்டானுறங்க ஒளித்தான் பித்தாக
உண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்கையாசனத்துள்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே

அளிக்கும் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பவனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகலகலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியும் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப் பணிந்தருள்
வாய் வடநூற்கடலும்
தேக்கும் செந்தமிழ் செல்வமும்
தொண்டர் செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலா வல்லியே

பஞ்சப் பித்தரு செய்ய பொற்
பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருத்தாய்
சகலகலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயயெழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமென்பா
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிற் பணமு மவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்
வாய் நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முங்சிதை யாமைநல்குங்
கல்விப் பெரும் செல்வப் பேறே
சகலகலா வல்லியே

சொற்கும் பொருட்டு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்கும் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பாதாம் புயத் தாயே
சகலகலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேம்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடி
உண்டெனும் விளிம்பிலுன் போற்றி
கண் கண்ட தெய்முளதோ
சகலகலா வல்லியே!

சகலகலா வல்லிமாலை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு இராமலிங்கம் கனகலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

அமரத்துவமடைந்த இராமலிங்கம் கனகலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் சில சைவமும், தமிழும் தழைத்தோங்கும் ஈழத்தில் யாழின் தென்பகுதியில் பிரபலம் வாய்ந்த சந்தையுடன், பசுமையான வயல்களும், குளங்களும், பச்சைபசேலென, உயர்ந்து வளர்ந்த தென்னந்தோப்புகளும் காட்சியளிக்கும் கொடிகாமத்தில், பருத்தித்துறை வீதியைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டிருந்தவர்களான உயர்சைவ வேளாண் குலத்தில் தோன்றிய இராமலிங்கம் தங்கமுத்து தம்பதியரின் இல்வாழ்வில் அருந்தவப் புதல்வனாக அமரர் இராமலிங்கம் கனகலிங்கம் அவர்கள் 1957ம் ஆண்டு ஒக்ரோபர் 31ம் நாள் இப்புவியில் அவதரித்தார்.

இவர் தன் அன்புச்சகோதரி அக்கா யோகராணியுடன் கொடிகாமத்தில் வாழ்ந்து வரும் நாளில் ஆரம்பக் கல்வியை கொடிகாமம் அரசினர் தமிழ்ப் பாடசாலையிலும், பின்னர் புலமைப்பரிசிலில் சித்தியெய்திய இவர் உயர்கல்வியை 1968ம் ஆண்டளவில் நெல்லியடி மத்தியகல்லூரியிலும் அதன்பின் 1981இல் யாழ்நகர் ஆயுர்வேதக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். நாட்டின் சீர்ற்ற சூழ்நிலையால் 1985ம் ஆண்டு ஜெர்மனிக்குப் புலம் பெயரும் நிலை ஏற்பட்டது. அப்பொழுது ஜெர்மனியில் வாழ்ந்து வரும் நாளில் உரும்பிராய் தெற்கு ஐயாத்துரை பஞ்சலிங்கம், ஏழாலை மேற்கு செல்லம்மா தம்பதியினரின் கனிஸ்டபுதல்வி கிரிஜாவை 1986ம் ஆண்டு திருமணம் புரிந்து, அன்புடனும் சிறப்புடனும் இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்த இவர்கள் அனிற்றா, சபீனா, அபிராம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்முத்துக்களைப் பெற்று பேரானதமடைந்தனர். பிள்ளைகளை சீராட்டி பாராட்டி வளர்ப்பதில் ஒரு தாய்க்கு இணையாகவும், அவர்கள், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவும், நம்நாட்டு நம்மவர், புலம் பெயர்ந்த தமிழர் வாழ்வு, தமிழரின் நிலைமை பற்றியும் அவர் தன் பிள்ளைகளுக்கு எடுத்துரைப்பார்.

இந் நிலையில் 2004ம் ஆண்டு லண்டனில் வாழும் விருப்புடன் குடும்பத்தினருடன் இடம் பெயர்ந்த அவர், பிள்ளைகளின் படிப்பில் மட்டுமல்லாது கவிதைத் துறையிலும் கவனம் செலுத்தினார். தமிழ்மேல் கொண்ட பற்றினால் 2009ல் கவிதையில் ஈடுபட்ட அவர் 850க்கும் மேற்பட்ட கவிதைகள் எழுதியுள்ளார். கிரிகாசன் எனும் புனைபெயரில் தனது கவிதைகளை சந்தவசந்தம் (இந்தியா), எழுத்து.கொம் கவிதை இணையத்தளம், துபாய் தமிழர் சங்கமம், எனப் பலவற்றுக்கு எழுதியவருக்கு மரபுப் பாமணி, இறையருட் கவிச்செல்வம் என்னும் பல விருதுகள் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். Lankasri முன்னர் GTV, ILC, IBC போன்ற பல ஊடகங்களில் தாயகத்தைப் பற்றிய கவிதைகள் பிரசுரிக்கப்பட்டு பல பாராட்டுதல்களும் பெற்றுள்ளார். கவிதைநூல் வெளியிடும் ஆவலினால் கிரிகாசன் என்னும் புனைபெயரில் இவரின் கவிதையின் ஒரு பகுதி "தமிழே தருவாய் நல்வரம்" என்ற நூல் வெளிவந்தது. கொழும்பில் மணிமேகலை பிரசுரத்தினரால் 33 நூல்கள் 05.09.2015 அன்று வெளியிடப்பட்டது. அவற்றில் லண்டன் கிரிகாசனின் "தமிழே தருவாய் நல்வரம்" என்ற கவிதை நூலும் ஒன்றாகும் என்பதை இச்சமயத்தில் அறியத்தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய நோய்வாய்ப்பட்ட இவர் மருந்தினால் சுகப்படுத்தக் கூடியதாக இருந்தும் கால்வீக்கம் என்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர், இதயழற்சியால் 12.09.2016ல் மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்களை தவிக்க விட்டு, ஆவணி 28ம் நாள் திங்கட்கிழமை உத்தராட நட்சத்திரம் பூர்வபட்ச ஏகாதசி திதியில் இப் பூவுலகம் விட்டு இறைவனடி சேர்ந்துள்ளார். இவரின் பூவுடல் போனாலும் புகழுடல் அழியாது என்பது திண்ணமே!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப விருட்

இராமலிங்கம் + தங்கமுத்து

- யோகராணி + துரைசிங்கம்
  - கருணானந்தன் + வர்ஷினி
    - ஆஷான்
    - ரிஷன்
  - கலாஜினி + சிவா
    - தக்ஷா
    - ராமன்
  - துஷ்யந்தன்
- **கனகலிங்கம்**

- புஸ்பராணி + கந்தசாமி
  - றஜனி + வரதராசா
    - சுபானா
    - கேஷிகா
    - சாளிகா
  - ஜெனனி + ஜெயகுமார்
    - அபிஷேக்
    - விதுஷேக்
    - ஜெனுஷேக்
  - சுதாஜினி + பிறேமகாந்தன்
    - துஷாரா
    - மீருஷா
  - தர்ஷினி + செல்வகுமார்
    - ஆகாஷ்
    - ஆருஷ்
- செல்வராஜா + விமலாதேவி
  - செல்வசுஜி + செந்தூர்கும
    - டிலக்ஷனா
    - விதுசனா
    - சஹானா
  - செல்வகிறீச
    ஜெயா
    - நிதேஷ்
    - அக்ஷயா
  - செல்வகலா
    சுகந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ிருட்சம்

**பஞ்சலிங்கம் + செல்லம்மா**

- விபுலானந்தராஜா + சரோஜாதேவி
  - வினோதன்
  - விரோசா + தயான்
- இரவீந்திரராஜா + ஜெயந்திமாலா
  - ஜெயன் + கௌசி
    - சௌமியா
  - நிரோசன் + மேனகா
    - ஆரியான்
    - டியான்
  - அனோஜா + மதேசன்
- வனஜாராணி + சந்திரலிங்கம்
  - பிரசன்னா + கோபிதா
    - அஸ்வின்
    - டிவ்யா
  - மதுசன்னா + வித்தியா
    - றிஷான்
    - றியாஸ்
  - சலுஜா + பாலன்
- மனோகரன் + விஜயகுமாரி
  - மிரோனிக்கா
  - ஜீனகா
  - ஸ்ரெபான்
- **கிரிஜா**
  - அனிற்றா
  - சபீனா
  - அபிராம்

கஜி +
ர்குமரன்
னா
ா
ா
கிறீசன் +
ா
கலாபன் +
னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னவரே!

எப்படித்தான் மனம் வந்து எங்களை தவிக்க விட்டு இடையில் சென்றீர்கள்? அல்லும் பகலும் என்னையும், எங்கள் பிள்ளைகள் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பீர்களே, நானோ,பிள்ளைகளோ வெளியில் போய்வர கொஞ்சம் பிந்திமுந்தினால் உடனே தொலைபேசியில் அழைத்து, நான் கூட்டிவர வரட்டா? என்றும், பிள்ளைகள் சிறிது பிழைவிட்டு நான் ஏதாவது சொன்னால் உடனே நான் தான் அந்தப் பிழையைச் செய்தேனென்று என்வாயை அடைத்து பிள்ளைகளைக் காப்பாற்றுவரீகளே! இது போன்று பல உள்ளன. இவ்வளவு பாசத்திற்குரிய, சிறந்த அப்பாவாக இருந்த நீங்கள் இப்போ எங்களை தவிக்க விட்டதேனோ? குடும்பத்தனருடன் மட்டுமல்ல பொதுவிடயங்களிலும் ஆர்வம் செலுத்திய நீங்கள் தமிழ்மீது கொண்ட ஆர்வத்தால் கவிதையில் மட்டுமல்ல தமிழ்ப் பாடசாலையிலும் சிறந்த நிர்வாகியாக செயற்பட்டீர்கள். நான் இன்று ஒரு தமிழ்ப் பாடசாலையில் தலைமையாசிரியராக இருக்கிறேன் என்றால் அது முழுவதும் உங்களாலேயேயாகும்.

உங்களுக்கு சிறிது நோய் இருந்தாலும் ஒரு நாளும் எங்களைக் கொஞ்சமும் நோகவிடாமலும், சிறிதளவெனும் சினக்காமலும் மிக மிகக் கவனமாகவும் அன்பாகவும் பாதுகாத்து வந்தீர்களே, நாங்கள் ஏதாவது விசேடங்களுக்கு போய்வந்தாலும் சந்தோசமாக அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு கணனியுடனும், விசைப்பலகையுடனும் உங்கள் பொழுதை கழிப்பீர்களே, நீங்கள் ஏதாவது அலுவலாகப்

பிள்ளைகளோடு சென்றாலும் என்னையும் நீரும் வாரும் என்றும், அம்மா வரவில்லையா? என்றும் பிள்ளைகளைக் கேட்பீர்களே, இப்ப எப்பிடியப்பா எங்களை தவிக்க விட்டு இடைநடுவில் சென்றீர்கள்?

நீங்கள் இருக்கும் போது எம்மை அன்புடனும், வாஞ்சையுடனும், அரவணைப்புடனும், பாதுகாப்புடனும் கவனித்தீர்கள். ஏதோ அதேமாதிரி நானும், பிள்ளைகளும் உங்களை நன்றாகக் கவனித்தோம் என்ற எண்ணம் சிறிது ஆறுதலைத் தந்தாலும், உங்கள் பிரிவு தாங்கமுடியாத கவலையைத் தருகின்றது.

நீங்கள் எமைவிட்டுப் பிரிந்தாலும், உங்கள் ஆத்மா சாந்தியடைவதோடு, என்னையும், பிள்ளைகளையும் கடவுளாகயிருந்து நல்வழி நடாத்த வேண்டும் என்று வேண்டி வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி!

**உங்கள் மனைவி, கிரிஜா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear Appa,

Through a lot of struggles you still never complained. Even though you were in pain you would still not forget to wake us up for work, make us tea and see us go off. You were so kind and gentle and never wanted to hurt anyone. You had an innocent soul like a child. We still mesmerize the times when you created video games, wrote poems and how much you loved drinking your hot chocolate.

Thank you for teaching us what truly matters in life and for all the love you have provided us. Thank you for trusting us and never doubting any big decisions we took in life. We are truly proud to have had such an amazing dad and no one will ever know what it meant to lose you.

It aches to know that you are not with us anymore and it is a feeling we are unable to get used to. You live within our memories and will never be forgotten. Thank you for everything you have done for Amma and us.

Rest in Peace.

**Sabina**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hello Dad,

You left behind two beautiful daughters and a loving wife. Appa thanks for everything you did so far and from now on I hope I can be half the man you were. I promise to look after our family just like you did, at first I was wondering why I have to cope with all the pressure such as being the man of the house etc. But now that I look back at it, it feels like a privilege. You taught me so much that I will never forget about our world, the society we live in and how to be a good man. And if you saw me cry at your funeral it was mainly happy tears even though it might of not seem like that, I was honestly happy looking back at the memories we had together. You were there and supported me with every single step I took. I still remember in Dortmund when we used to go to the temple as a family and you would drop Akka, sabi and mum off and you would lie saying we are going to park the car however we always ended up going to the pizzaeria. It's these small things that I will cherish forever. If I ever were to get praises about being a good parent, I will be sure to tell them where I learned from you.

Rest in Peace

**Api**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hi Appa,

You have been the most patient and kindest father anyone could have ever wished for. You gave us utmost respect and freedom to explore our paths as we wished. I appreciate every piece of advice you gave us and every bit of knowledge you shared with us. Us, kids, grew up to the individuals we are today because of how you taught us to be with kindness, sympathy, intellect and free. We will carry on making you proud, and nothing less. Be assured that we will take care of mum. You lived a fulfilling life as a great human being, husband and father. Thank you for never giving up on life. Thank you for showing us how life is meant to be. Thank you for always trusting us. We will always miss you. We will always cherish the memories we had with you. You will always be alive in our hearts now and forever. I am sure you found peace in heaven. I am certain you are doing well.

Rest in peace

**Anita**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன்னையின் தவப்புதல்வன்
தரணி போற்றும் பாவலன்
வயதில் என்னிலும் இளையவனாலும்
அறிவில் என்னிலும் முதியவன்
எங்கள் குலம் தழைக்கவென்று
ஒரே புதல்வனாய் அவதரித்து
எங்களை வாழ வைத்த
என்னருமைத் தம்பி கனகு

அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
ஊர் போற்றும் உத்தமனாய்
பார் போற்றும் பாவலனாய்
நீ வாழ்ந்தது மட்டுமல்லாமல்
எங்களையும் வாழ வைத்தாய்
இன்று எங்களைத் தவிக்க விட்டு
மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டாய்

கடவுள் அமைக்கப் போகும்
பூஞ்சோலைப் பூமியில்
இன்னொரு புதுப் பிறவியில்
அக்காவும் தம்பியுமாக மீண்டும் வாழ்வோம்

**என்ற நம்பிக்கையுடன்; அக்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு வயதிலிருந்து எங்களைப் பாசத்துடன் வளர்த்த எங்கள் ஒரேயொரு அன்பு மாமா. நாங்கள் ஈழத்தில் வாழ்ந்த போது எங்களை நலம் விசாரிப்பதோடு மாத்திரமல்லாமல் விளையாட்டுப் பொருட்களும் அனுப்பினீர்கள்.

நீங்கள் அனுப்பிய கொம்யூட்டர் விளையாட்டு அப்போது இலங்கையில் பிரபலம் ஆகவில்லை. எங்கள் நண்பர்களைக் கூட்டி வந்து பெருமையோடு அவர்களுக்கு எங்கள் மாமா அனுப்பியது என்று கூறி விளையாடியதை மறக்க முடியவில்லை.

பணம் செலவு செய்து வெளி நாட்டிற்கு எங்களை அழைத்து அன்பாகக் கவனித்ததை மறக்க முடியாது. பாசம், பண்பு, உண்மை, நேர்மை உள்ள ஒரு தெய்வப்பிறவி நீங்கள். உங்களின் மறைவு ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பு.

அன்பு மருமக்கள்.

**கருணானந்தன், கலாஜினி, துஷ்யந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் மைத்துனி மனதிலிருந்து

எம் பாசத்திற்கும், நேசத்திற்கும், மரியாதைக்குமுரிய அன்பு மைத்துனரே!

சிறிய சுகயீனம் காரணமாக வைத்தியசாலை சென்ற நீங்கள் மீண்டு வந்து உங்கள் குடும்பத்தினருடன் மகிழ்வாய் இருப்பீர்களென எண்ணியிருக்கையில் தொலைபேசி அழைப்பொன்று அந்த துயரச் செய்தியைத் தெரிவித்தது. செய்தியறிந்த நாம் செய்வதறியாமல் திகைத்துப் போனோம்.

எல்லோருக்கும் நல்லதையே செய்ய நினைக்கும் அந்த அன்புள்ளத்தை என்னவென்று சொல்வது. நீங்கள் வைத்தியசாலை செல்ல ஒரு வாரத்திற்கும் முன்பும் ஒருவரின் இறப்பிற்கு கண்ணீர் அஞ்சலி எழுதினீர்களே! அதில் ஒருசில வரிகள்;

தொட்டிணைந்த பெண்ணவளும் துடிக்கிறாள் பிள்ளைகளோ துன்பங் கொண்ட கொட்டும் விழி நீர் சொரியக் கொள்ளுமுடல் தீ எரிக்கக் குமுறும் நெஞ்சம் விட்டுமையும் காப்பாற்ற வேறுவழியுண்டோ நம் விதியென்றொன்றாம்.

கட்டளைக்குப் பணிவதன்றி காணுலகில் வேறுண்டோ கலங்காய் நெஞ்சே!

என்று எழுதிய நீங்கள், இன்ற உங்கள் மனைவி பிள்ளைகளை தவிக்கவிட்டு சென்றதேனோ!

நீங்கள் செய்த புண்ணியத்தால் உங்கள் ஆத்மா எப் பிறப்பிலும் நல்லதொரு வாழ்க்கையே வாழும் என்பதில் சந்தேகம் இல்லை. உங்கள் பிரிவால் துயருறும் உங்கள் மனைவி பிள்ளைகளை தெய்வமாக இருந்து ஆசிர்வதிப்பீர்களாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள், மருமக்கள் மனதிலிருந்து

**அன்பான எங்கள் அங்கிளே!**

அங்கிள் என்றாலே எம் மனதில் தோன்றுவது, உங்களின் சாந்தமான புன்னகையுடன் கூடிய கனிவான பேச்சும், தானாகவே முன்வந்து உதவி செய்யும் மனப்பான்மை யுமேயாமாகும்.

மனிதர்களில் சிறந்தவர்கள் சிலருக்கு மட்டுமே சிறந்தவராக வாழமுடியும், ஆனால் என்னால் எல்லோருக்குமே சிறந்தவராக வாழமுடியும் என்று, நீங்கள், எங்கள் எல்லோருக்குமே வாழ்ந்து காட்டியிருக்கிறீர்கள் இது எங்களிற்கு இப்பவும் கேள்வியாகவே யுள்ளது. இப்படியான சிறந்த மனிதர் எங்களின் பேரன், பேர்த்திக்கு மருமகனாக கிடைக்கப் பெற்றது நாம் யாவரும் முன்பு செய்த பாக்கியமே!

அங்கிள் உங்களின் பொதுஅறிவும், கணணி அறிவும், கவிதை எழுதும் வல்லமையும், நீங்கள் நீங்களாகவே ஆராய்ந்து கற்றறிந்த விடையங்களை மற்றவர்களுக்கும் புரியவைத்து நீங்கள் அதில் அடையும் இன்பமும் எங்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் நீங்கள் கனடா வந்து எங்களுடன் கழித்த பொழுதுகள் இப்பொழுது மாதிரி இன்னும் எம்மனதில் நீங்காமல் உள்ளது. வைத்தியசாலை சென்ற நீங்கள் சுகமாகி வரவேண்டும் என்று ஆண்டவனை வேண்டினோமே! ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் சிறந்தவரான உங்களுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் நிரந்தர அமைதியை தந்து தன்னிடம் அழைத்துக் கொண்டானே! என் செய்வோம் பராபரனே!

எனினும் உங்களின் இறுதிப் பயணத்தில் பங்கேற்று இறுதி மரியாதை செலுத்தியதையிட்டு சற்றே ஆறுதலடைகின்றோம். நீங்கள் பகிர்ந்து கொண்ட கணணி பற்றிய அற்புதமான விடையமூலமாகவும், உங்களின் இனிய கவிதைகள் மூலமாகவும் (கவிஞர் கிரிகாசனின் kuyilinosai.blogspot.co.uk, kuyilkeetham.blogspot.co.uk இன்னும் பல இணையத்தள பத்திரிகைக் கவிதைகள் மூலமும் இவ்வுலகில் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

உங்களின் இனிய நினைவுகள் எங்கள் மனதில் எப்பொழுதும் நிறைந்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

## வாழ்க்கை

தேனோடும் மனம் மீதோடும் துயர்
தானோடும் மகிழ் வேயாகும்
வானோடும் முகில் போலோடும் உளம்
வாழ்வோடும் வழி தானோடும்
மீனோடும் கடல் மேலோடும் அலை
போலாடும் அது தள்ளாடும்
தானோடும் அலைமீதோடும் எமைத்
தாங்கும்ஓடம் வாழ்வாகும்

நிலவோடும் ஒளி நிலம்மூடும் அதில்
நினைவோ டினிமைகள் குதிபோடும்
பலஓடம் முகில் அருகோடும் சில
அதைமூடும் பொழு திருள்கூடும்
தலையோடும் மனம் தமிழோடும் சில
காலம் மகிழ்வுடன் இருந்தாலும்
பலமோடும் பெரும் வலியோடும்
பல துன்பம் மகிழ்வைப் பந்தாடும்

மலைபோலும் மனதிடமோடும் அதில்
கனிவோடும் நாம் நடந்தாலும்
வலைபோடும் விதி வாழ்வோம் பல
வழியிற் துயர்தர விளையாடும்
சிலைபோலும் மனம் இருந்தாலும் அதிற்
சிலநேரம் விழி வழிந்தோடும்
நிலைமாறும் துயர் தனை ஓடும்வகை
நினைவை மாற்றிடும் நிலைவேண்டும்

ஆக்கம்: கிரிகாசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்டிக்காரன் பாட்டு

கேளடா தம்பிநீ கேளடா — நீயும்
கேட்டிடப் பாட்டொன்று பாடவா
ஆளடா பூமியில் வாழடா ஒரு
ஆன வழிவரு மாமோடா (கேளு தம்பிநீயும் கேளடா)
கீழ்த்திசையிலே சூரியன் வந்தது
கோவில்தெருவிலே ஊர்வலம் போனது
ஆழக்கடலிடை கப்பலும்போகுது
ஆனந்தமாகவே பிற்பொழு தோடுது (கேளு தம்பிநீயும் கேளடா)
ஏழை வயிற்றிலே என்றும் பசிக்குது
ஏய்ப்பர் கூட்டமோ ஏறி மிதிக்குது
நாளை விடிந்திடும் வாழ்கவெனக் கூறுது
நம்பி இருந்திட எண்ணமும் போகுது (கேளு தம்பிநீயும் கேளடா)
பாழும் பணம் ஒருபக்கமா யோடுது
பட்டினிதான் ஏழைசொத்தென ஆகுது
வாழும்விதி நல்ல உள்ளங்கள்கொல்லுது
வாட்டி வதைத்திடப் பொய்மையும் வெல்லுது (கேளு தம்பிநீயும் கேளடா)

ஆக்கம்: கிரிகாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இறையருட் கவிச்செல்வம்" கிரிகாசன் ஆத்மா சாந்திக்காக**

# "தமிழே தருவாய் நல்வரம்"

அன்னை மடியில்
31.
10.
1957



இறைவனடியில்
12.
09.
2016

**தமிழீழத்தில் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் யேர்மனி டோர்ட்முண்ட், பிரித்தானியா பாக்கிங்சைட்** ஆகிய பகுதிகளை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர் மரபுப்பாமணி கிரிகாசன் (இராமலிங்கம் கனகலிங்கம்) அவர்களின் திடீர் மறைவு அறிந்து உள்ளத்தால் உடைந்து போனோம். தமிழ்க் கவிஞரான கிரிகாசன் அவர்கள் குடும்பத்தின் முன்னேற்றத்திற்கான உழைப்புடன் மட்டும் திருப்தியடையவில்லை. தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் பணியாற்றியுள்ளார். புலம் பெயர் தேசங்களில் வாழ்ந்தபோது யேர்மனியில் "தமிழ்க் கல்வி மேம்பாட்டுப் பேரவை" யின் கல்விச் சேவையுடன் இணைந்தியங்கும் "தமிழாலயம்" (டோர்முண்ட் பிரிவு) பள்ளியில் கடமையாற்றி அதன் வளர்ச்சிக்காகப் பலவகையிலும் உதவியுள்ளார். பிரித்தானியாவில் பேரவையுடன் இணைந்தியங்கும் தமிழ்ப் பள்ளிகளில் ஒன்றான இல்போட் தமிழ்க் கல்விக் கூடத்தின் (TKK-Ilford - வெள்ளிக்கிழமை வகுப்பு) வளர்ச்சிக்காக, அதன் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றும் தனது துணைவியாருக்கும் மறைமுகமாக ஒத்துழைப்பை வழங்கியுள்ளார். கவிதை உலகிலும் தமிழைப் பதிய வைத்துள்ளார். மிகக் குறுகிய காலத்திலேயே **"மரபுப்பாமணி"**, **"இறையருட் கவிச்செல்வம்"** ஆகிய விருதுகளையும் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார்.

**"தமிழே தருவாய் நல்வரம்"** என்ற அன்னாரது கவிதைத் தொகுப்பு கிரிகாசன் ஆத்மாவை என்றென்றும் அர்ச்சித்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. அதனால் கிரிகாசன் இழப்பு அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல. தமிழுக்கும் தமிழைக் கற்கும் மாணவர்களுக்கும் பேரிழப்பாகும்.

இத்தகைய குடும்பத் தலைவரின் பேரிழப்பினால் அதிர்ச்சியும் பெரும் துயரும் அடைந்துள்ள அன்னாரது அன்புத் துணைவியார், பிள்ளைச் செல்வங்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் துயரில் நாமும் இணைந்து கொள்கின்றோம். நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை விதி வழியே ஆனாலும் **"தமிழே தருவாய் நல்வரம்"** எனவேண்டி கிரிகாசன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**தமிழ்க் கல்விக் கூடங்கள்** (TKK)

வடகிழக்குப் பிராந்தியம், பிரித்தானியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்ப குலவிளக்கு இயற்கையெய்திய செய்தியறிந்து, உடனடியாக ஓடோடி வந்து உதவிகள் செய்தோருக்கும், நேராகவும், தொலைபேசி வழியாகவும், முகனூல் வழியாகவும், ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கல்களையும், ஆறுதல்களையும் தெரிவித்தோருக்கும், பூங்கொத்துக்கள், மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும், வெளிநாடுகளிலிருந்து வந்து எங்கள் கூடவேயிருந்து துயரைப் பகிர்ந்து கொண்ட அத்தனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றியுடன்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



**Designed & Printed @ JR Print**
**Tel: 020 8503 6643**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org